ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2413/24 - 2024 දෙසැම්බර් මස 03 වැනි අඟහරුවාදා - 2024.12.03

2413/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MOR/LAN/01/FI/204.
காணி அமைச்சின் இல.: 4-3/4/2016/CR/54.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் மொறட்டுவை, மோதர பிரதேசத்தில் அமைந்துள்ள லன்சியாவத்த என்றழைக்கப்படும் பின்வரும் காணியை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வருண நிறுவனத்தின் கிளை மற்றும் ராடார் நிலையத்தின் பாவனைக்காக எடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்பதை நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் மொறட்டுவை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள எகொடஉயன எனும் கிராமத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2022.12.31 ஆந் திகதிய கடஸ்தரா வரைபட இலக்கம் 520217 தொகுதி இல. 14, தாள் இலக்கம் 4 இல் காட்டப்பட்டுள்ள மொத்த நிலத்தில் 0.4802 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப்படும் காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 02**
காணியின் பெயர்: கண்டுபிடிக்க முடியவில்லை; உரிமை கோருபவர்: காணப்படவில்லை; விஸ்தீரணம்: 0.0030 ஹெக்டயார்.

**துண்டு இல. 03**
காணியின் பெயர்: கண்டுபிடிக்க முடியவில்லை; உரிமை கோருபவர்: காணப்படவில்லை; விஸ்தீரணம்: 0.0185 ஹெக்டயார்.

**துண்டு இல. 06**
காணியின் பெயர்: லன்சியாவத்தை; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.2943 ஹெக்டயார்.

**துண்டு இல. 07**
காணியின் பெயர்: கண்டுபிடிக்க முடியவில்லை; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0013 ஹெக்டயார்.

**துண்டு இல. 08**
காணியின் பெயர்: காணி கிடைக்கவில்லை; உரிமை கோருபவர்: சிறிக்குஹேவகே லால் பிரியந்த டயஸ் வசிக்கும் இல. 310/17, எகொடெஉயன வீதி; விஸ்தீரணம்: 0.0151 ஹெக்டயார்.

**துண்டு இல. 09**
காணியின் பெயர்: லன்சியாவத்த; உரிமை கோருபவர்: இல. 310/17, எகொடெஉயன வீதியில் வசிக்கும் சிறிக்கத்தகே லயனால் பெர்னாண்டோ, விஸ்தீரணம்: 0.0179 ஹெக்டயார்.

**துண்டு இல. 10**
காணியின் பெயர்: லன்சியாவத்தை; உரிமை கோருபவர்: காணப்பட முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0239 ஹெக்டயார்.

**துண்டு இல. 11**
காணியின் பெயர்: லன்சியாவத்தை; உரிமை கோருபவர்: காண முடியவில்லை; விஸ்தீரணம்: 0.1062 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மொறட்டுவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**எஸ். பி. கிரிவத்துடுவ,**
பிரதேச செயலாளர்
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2024, நவெம்பர் 04.

EOG 12 - 0024

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MOR/LAN/01/FI/219.
காணி அமைச்சின் இல.: 4-3/17/2021/LO/81.

எகொடஉயன பொலிஸ் நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொறட்டுவை பிரதேச செயலகப் பிரிவின் 556A எகொடஉயன மத்தி கிராம அலுவலர் பிரிவில் எகொடஉயன கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.10.09 ஆந் திகதிய காடாஸ்ட்ரல் வரைபடம் இல. 520217 இன் வலயம் 09 இன் 19 ஆம் இலக்க தாளில் காட்டப்பட்டுள்ள மொத்த தொகையில் 0.1160 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப்படும் காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**
காணியின் பெயர்: மதங்கவத்தை; விபரம்: தோட்டம், 02 நிரந்தர கட்டிடங்கள் உள்ளன; உரிமை கோருபவர்: எர்வின் ஸ்டானிஸ் புலத்சிங்கள; விஸ்தீரணம்: 0.1160 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி பி.ப. 12.30 மணிக்கு மொறட்டுவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அனைத்துஉரிமைகோரலுக்கு ஆதாரமாக உள்ள

உறுதிகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள், விசாரணையின் போது வழங்கப்பட வேண்டும்.

**எஸ். பி. கிரிவத்துடுவ,**
பிரதேச செயலாளர்
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2024, நவெம்பர் 27.

EOG 12 - 0025

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MOR/LAN/01/FI/210.
காணி அமைச்சின் இல.: 4-3/18/2019/WS/152.

இரத்மலானை, மொறட்டுவை கழிவுநீர் மீள்சுழற்சி கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 ஆவது பம்பு ஹவுஸை நிர்மாணிப்பதற்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் மொரட்டுவ பிரதேச செயலகப் பிரிவின் 547 ஆம் இலக்கம், அங்குலானை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அங்குலானை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.07.31 ஆந் திகதிய காடாஸ்ட்ரல் வரைபட இல. 520212 வலயம் 01 இன் 7 ஆம் தாளில் காட்டப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பில் 0.1715 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப்படும் காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: பயுருகஹவத்த, வடகெயியா கஹவத்த, வரிப்பணம் இல.210/12, டயஸ் பிளேஸ்; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.1694 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**

காணியின் பெயர்: பயுருகஹவத்த, பறக்கியகஹ வத்த, வரிப்பணம் இல.210/12, டயஸ் பிளேஸ்; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0021 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மொறட்டுவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் ன

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமை கோரலுக்கு ஆதாரமாக உள்ள அனைத்து உறுதிகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் விசாரணையின்போது வழங்கப்பட வேண்டும்.

**எஸ். பி. கிரிவத்துடுவ,**
பிரதேச செயலாளர்
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2024, நவெம்பர் 04.

EOG 12 - 0026

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.